**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness : **36**

| | | | |
|---|---|---|---|
| Name: | **செய்யதுபட்டாணி** | Caste: | |
| Father'sName: | செய்யது இஸ்மாயில் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A2,A 6, A11 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **06.03.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில் அருணாச்சலபுரம் தெருவில் குடியிருக்கிறேன். நான் லாரி ஓட்டுநராக இருந்தேன். அதன் பின்னர் கூலக்கடை பஜாரில் அரிசி கடை வைத்திருந்தேன். செல்லப்பா என்ற செய்யது சுலைமானை தெரியும். அவர் என் நண்பர் அல்ல. அவர் மரக்கடை வைத்திருந்தார். நான் அவர் கடைக்கு செல்வதில்லை. 15 வயது முதல் நான் தென்காசியில் தான் இருந்து, வளர்ந்து, வாழ்ந்து வந்தேன். எங்கள் ஊரில் இஸ்லாமியர்களுக்கு என்று ஒரு அமைப்பு உள்ளதா என்று எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் 2007 ம் ஆண்டு பிரச்சனைகள் ஏற்பட்டது. நான் இஸ்லாமிய அமைப்புகளில் உறுப்பினராக சேர்ந்தது இல்லை. எங்கள் ஊரில் பிரச்சனை ஏற்பட்ட நேரத்திலும் நான் அவர்களை அழைத்து அறிவுரை எதுவும் கூறியதில்லை. 14.08.2007 அன்று

நடந்த பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது. அன்றைய தினம் நான் லாரி ஓட்டுவதற்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்ததார்கள் என்றும் நான் நெடுங்காலமாக தென்காசியில் வசித்து வருகிறேன் என்றும் தென்காசியில் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழக்கத்தின் அமைப்பு துவக்கப்பட்ட பின்னர் அதில் இணைந்திருந்த இளைஞர்கள் இஸ்லாமிய பெரியவர்களாகிய எங்களை மதிக்கவில்லை என்றும் அதனால் நாங்களும் அந்த அமைப்பின் நடவடிக்கையில் இருந்து ஒதுங்கி இருந்தோம் என்றும் இந்நிலையில் குமார் பாண்டியன் கொலைசெய்யப்பட்டு இறந்த வழககில் பிணையில் வந்த அப்துல்லா மற்றும் அனிபா ஆகியோர் பிணை நிபந்தனை கையொப்பம் செய்ய சென்றுவந்தார்கள் என்றும் அப்போது அவர்களுடன் அலாவுதீன் மற்றும் அவரது கூட்டாளிகள் பாதுகாப்பிற்காக ஆட்டோவிலும் இருசக்கரவாகனத்திலும் சென்று வந்தார்கள் என்றும் அது அசாதாரணமான சூழ்நிலையை ஏற்படுத்தியது என்றும் அதனால் அவர்கள் நடவடிக்கையில் இருந்து நாங்கள் ஒதுங்கியிருந்ததாக கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 14.08.2007ம் தேதி காலை நானும் மரக்கடையை சேர்ந்த செல்லப்பாவும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது அப்துல்லா மற்றும் அனிபா ஆகியோர் மற்றும் அவர்களுடன் வந்த சிலரும் கத்தி, அரிவாள் போன்றவற்றை முதுகில் மறைத்து எடுத்து வந்து பரபரப்பாக இயங்கி

கொண்டிருந்தனர் என்றும் ஆட்டோஸ்டாண்ட் அருகில் சம்சு, பஸ்லுதீன், அசன்கனி, மீரான் மைதீன், மேசாக், அபு, ஜின்னாவின் மகன், ராஜாமுகம்மது, நாகூர்மீரான் ஆகியோர் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் அப்போது கிழக்கில் இருந்து மேற்காக அனிபா, அப்துல்லா ஆகியோரை ஹைலைட் செய்துகொண்டு வந்தார் என்றும் மேலும் இரண்டு ஆட்டோவில் நின்றுகொண்டிருநதவர்கள் அந்த ஆட்டோவில் ஏறும்போதே அலாவுதீன் "ஸ்பாட் " வைப்பான் என்றும் ஒரு பயலையும் விடக்கூடாது என்றும் கூறி காலை 9.30 மணிக்கு மேற்கு நோக்கி சென்றார்கள் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சுமார் 3/4 மணிநேரம் கழித்து கூலக்கடை பஜாரில் வெட்டு குத்து ஏற்பட்டு கொலை செய்யப்பட்டதாக கேள்விப்பட்டேன் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. செவ்வாய் கிழமை தோறும் சக்தி பாண்டியன் வகையறா முத்தாரம்மன் கோவிலில் சாமி கும்பிட வந்து செல்வதை கண்காணித்து கொண்டிருந்த அலாவுதீன் மற்றும் அவரை சேர்ந்தவர்கள் அதனை வைத்து திட்டமிட்டுள்ளார்கள் என்று பின்னர் தெரிந்துகொண்டேன் என சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது கூறியிருக்கிறேன் என்றால்ச ரியல்ல. சொர்ணத்தேவர் மகன்களை தெரியாது. சக்திப்பாண்டியன் வகையறாவின் வழக்கில் நான் சாட்சியாக இல்லை. அந்த வழக்கில் இஸ்லாமியர்கள் பிறழ்சாட்சியானால் இவ்வழக்கில் இஸ்லாமியருக்கு எதிரான வழக்கு பலவீனம் ஆகும் என இருவரும் செய்துகொண்ட ரகசிய உடன்படிக்கையின் அடிப்படையில் எங்கள் ரகசிய உடன்படிக்கையின் படி சொர்ணத்தேவர் மகன்களுக்கான வழக்கில் இஸ்லாமியர் களுக்காகவும் இவ்வழக்கில் அவர்களுக்கு எதிரான

சாட்சிகளாகிய நாங்கள் பிறழ்சாட்சியாக இருந்தால் எதிரிகள் மீதான வழக்கில் விடுதலை கிடைக்கும் என்ற நோக்கில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**